19.02.2026

MCOP.N0.875/2024 ,

P.W. 2. திரு. வெயில்முத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை : –

விபத்தில் இறந்துபோன வெயிலுமுத்து எனது சித்தப்பா, உறவினர் என்றால் சரிதான். விபத்து நடந்தரோடு திருசெல்வேலி – மதுரை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை. நான் விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்கள் பின்னால் நான் சென்றேன். விபத்து நடந்தபின்பு தான் அந்த இடத்திற்கு சென்றேனா என்றால் என்னை ஓவர்டேக் செய்து தான் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சென்றது. அந்த விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது முன்னால் சென்ற டிரெக்டரில் சென்ற வெயிலுமுத்து திடீரென பிரேக்போட்டதால் தான்பின்னால் வந்த வாகனம் மோதிவிபத்து ஏற்பட்டது என்றும் விபத்திற்கு வெயிலு முத்து தான் காரணம் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவர் நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக பார்க்காத விபத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.